1968 பிப்ரவரி 16]

சிங்கோனா துறை, கோவை

*53 வினா—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள அரசினர் சிங்கோனா துறையில் பணியாற்றிவரும் தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள் (மேற்பார்வையாளர்) முறையே எத்தனை பேர்?

(இ) மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கையை குறைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

			நீலகிரியில் அமைந்துள்ள சிங்கோனாத் தோட்டத்திலும் தொழிற் சாலையிலும்.	ஆனைமலையில் அமைந்துள்ள சிங்கோனாத் தோட்டத்திலும் தொழிற் சாலையிலும்.
		(1)	(2)	(3)
(அ)	(1)	பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் உள்பட பணியாற்றி வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை.	795	1,110
	(2)	அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகள் உள்பட பணியாற்றி வரும் மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கை.	22	41
(இ)		இல்லை.		

திரு. இ. ராமசாமி : தனியார் நடத்துகின்ற தோட்டத்தையும் அரசு நடத்துகின்ற எஸ்டேட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அரசு நடத்துகின்ற சிங்கோனா துறையில் அதிகமான அளவு மேற்பார்வையாளர்கள் இருப்பதனால், இதற்குத் தக்க அளவு தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, வேலைப் பளுவைக் குறைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசு முன் வருமா என்று கேள்வி கேட்கப்பட்டது, இப்போது அதிகமாக எண்ணிக்கை இருப்பதனால் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவார்களா என்று கேட்கிறார். தொழிலாளர்களின் எண்ணிக்கை தேவைப்படுகிறபோது அதிகரிக்கப்படும்.

மங்கலம் கிராமத்தில் மண் அரிப்பு

*54 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருப்பூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட மங்கலம் கிராமத்தை மண் அரிப்புத் தடுப்புத் திட்டத்தின் கீழ் கொண்டுவர எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மண்வளப் பாதுகாப்புப் பணிகளை முதற்கண் மங்கலம் கிராமத்தில் 50 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் நிறைவேற்றலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. (மண்வளப் பாதுகாப்பு) முன்னோடிப் பணிகளை, உடனடியாகக் கவனிக்கும்படி பல்லடம் வேளாண்மைப் பொறியியல் மேற் பார்வையாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. குடியானவர்கள், இத்திட்டத்தை ஊக்கமுடன் வரவேற்றால், இத் திட்டத்தை மேலும் கூடுதல் பரப்பில் நிறைவேற்ற இயலும்.

திரு. சு. துரைசாமி : பல்லடம், அவிநாசி இப்படிப்பட்ட தாலுக் காக்களில் பருவ மழை போதிய அளவு இல்லாத காரணத்தினால் இந்தத் தாலுக்காக்களில் உடனடியாக மண் அரிப்புத் தடுப்புத் திட்டத்தை அமுல் நடத்தி விவசாயிகளுக்கு ஊக்கத்தை ஏற்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இப்போது கோயம் பத்தூர் துணைக்கோட்டம் உள்ளிட்டு 18 மண் வளப் பாதுகாப்புத் துணைக் கோட்டத்தை தொடர்ந்து நடத்த அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

கோழி வளர்ச்சி ஆய்வுக் குழு

* 55 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோழி, வாத்து பண்ணை சம்பந்தமான மூவர் கமிட்டி அறிக்கை அரசாங்கத்திற்கு கிடைத்துவிட்டதா?

(இ) ஆம் எனில், அவ்வறிக்கையின் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) கோழி, வாத்து வளர்ச்சி சம்பந்தமான மூவர் கமிட்டியின் அறிக்கை இன்னும் அரசாங்கத்திற்கு கிடைக்கவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன் : இந்த அறிக்கை வந்தவுடன் அங்கத்தினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்த அறிக்கையை கனம் அங்கத்தினர்கள் கவனத்திற்காக சபையில் வைக்கிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: இது சம்பந்தமாக அமைக்கப் பட்ட மூவர் கமிட்டியின் உறுப்பினர்கள் பெயரை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?